Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 2, Special Issue - 1, November 2022 E-ISSN: 2583-0481

# Education in the poems of M. Mehta

**K. Jelin Suji,** Ph.D, Research scholar, Manonmaniam Sundaranar University, Thirunelveli, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-1916-5257
**Dr. D. Mahila Jeni**, Research Centre, Lekshmipuram college of Arts and Science, Neyyoor, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-5346-4859
**DOI: 10.5281/zenodo.7313094**

## Abstract

*Education is teaching people the value to live by knowledge. Teaching is something unknown, not education. The purpose of education is to teach those who do not know how to behave in life. Education is the best imperishable wealth one can have. Education is essential to knowledge as food is to the body. Character, morals, good work for anyone and high purpose can only be achieved through higher education. This essay examines how such specialized education is situated in Metha's poetry.*

**Keywords:** Education, Poems, Metha.

## Reference

[1] Sundara Vadivel - *Singaravelarum Pakutharivum*, Rasana book house, Chennai-2
[2] Mu.Metha - *Metha Kavitykal* , Kavitha Publications, Chennai-17, Second Edition, 2011
[3] Mu.Metha - *Oru Vanam Iru Seraku*, Varma publications, Chennai-17, Eleventh Edition,2016
[4] Mu.Metha - *Ennudiya Pothi Marankal*, Thirumagal Nilayam,Chennai-17, Eighth Edition,2014
[5] Mu.Metha - *Kanavukalin Kaieluthu*, Kavitha Publications, Chennai-17
[6] Mu.Metha - *Ootai Theekuchi*, Kavitha Publications, Chennai-17, Second Edition, 2001

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# மு.மேத்தா கவிதைகளில் கல்வி

**கு. ஜெலின் சுஜி,** முனைவர் பட்ட ஆய்வாளர்,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-1916-5257
**முனைவர் த. மகிலா ஜெனி,** தமிழாய்வு மையம்,
இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-5346-4859
**DOI: 10.5281/zenodo.7313094**

**ஆய்வு சுருக்கம்**

*மக்களுக்கு அறிவைப் புகட்டி வாழ வேண்டிய நெறிமுறைகளைக் கற்றுக் கொடுப்பது கல்வி ஆகும். தெரியாத ஒன்றைத் தெரிந்து கொள்வதற்காகக் கற்றுத் தருவது கல்வியல்ல. வாழ்கையில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று தெரியாதவர்களுக்கு நடந்து கொள்ள வேண்டிய முறைகளைச் சொல்லித் தருவதே கல்வியின் நோக்கமாகும். ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். உடலுக்கு உணவு எப்படியோ அப்படியே கல்வியானது அறிவுக்கு மிகவும் இன்றியமையாததாய் இருக்கின்றது. பண்பும், ஒழுக்கமும் எவர்க்கும் நலம் தரும் உழைப்பும் உயர்ந்த நோக்கமும் உயரிய கல்வியாலே அமையும். இத்தகைய சிறப்பு வாய்ந்த கல்வியானது மேத்தா கவிதைகளில் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.*

**குறிப்புச் சொற்கள்:** மேத்தா, கவிதைகள், கல்வி.

**முன்னுரை**

அறிவானது மனிதனிடத்தே இயல்பாக அமைந்திருக்கக் கூடியதாகும். அது அகத்தே அமைந்திருப்பதேயொழிய புறத்தே இருந்து வருவதொன்றன்று. ஒரு மனிதன் அறிகிறான் என்று சொல்லுவதனை உளவியல் முறையில் சொல்லும் போது அதைக் கண்டு கொள்கிறான் அல்லது அறியாமை திரையை நீக்குகிறான் என்றே சொல்லுதல் வேண்டும். இதனை இன்னும் நன்றாக ஆராய்ந்து பார்க்குமிடத்து எல்லையற்ற அறிவுக்களஞ்சியமாகிய ஆன்மாவை மூடியிருக்கும் அறியாமைத் திரையை நீக்குதலே கற்றல் ஆகும் என்பது தெளிவாகத் தெரிகின்றது. அதற்கு துணைப் புரிகின்ற கல்வி மேத்தா கவிதைகளில் அமைந்துள்ளத் தன்மையை ‘மு.மேத்தா கவிதைகளில் கல்வி’ என்ற தலைப்பில் இக்கட்டுரை ஆராய்கிறது.

**கவிஞர் மு.மேத்தா:**

மு. மேத்தா (முகமது மேத்தா, பிறப்பு: செப்டம்பர் 5, 1945) பெரியகுளத்தில் பிறந்தார். பெரியகுளம் வி.நி.கழக உயர்நிலைப்பள்ளியிலும், மதுரை தியாகராசர் கலைக்கல்லுரியிலும்; பயின்றார். இவர் சென்னை மாநிலக்கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு

பெற்றவர். புதுக்கவிதைக்கு ஏற்றம் தந்த கவிஞர்களுள் இவரும் ஒருவராவார். உவமை உருவகங்களில் பழமையையும் புதுமையையும் இணைத்த மு.மேத்தா, வளமான கற்பனை, எளிய நடை, எளிய சொல்லாட்சி, மனித உணர்வுகளின் படப்பிடிப்புகளால் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தவர். இவரது முதற் கவிதைத்தொகுப்பு கண்ணீர்ப் பூக்கள். காதல் சோகமும், தமிழ்த் தாகமும் இழையோடும் அவரது கவிதைகள் அவ்வப்போது கூர்மையான சமூக விமர்சனங்களிலும் இறங்குவதுண்டு. சமூகச் சிக்கல்களை மையமிட்டு எழுதும் தரமான புதுக்கவிஞர்.

சமூக விமர்சனத் தொனியில் அமைந்த "தேச பிதாவுக்கு ஒரு தெருப் பாடகனின் அஞ்சலி" என்ற கவிதை மு.மேத்தாவுக்கு புகழ் தேடித் தந்த கவிதை ஆகும். மரபுக்கவிதைகள், புதுக்கவிதைகள், சிறுகதை, நாவல், கட்டுரைகள் முதலியவற்றைப் படைப்பதிலும் வல்லவரான மு. மேத்தா அத்துறைகளில் பதினைந்திற்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். அவருடைய நூல்களுள் "ஊர்வலம்" தமிழக அரசின் முதற்பரிசினைப் பெற்ற கவிதை நூலாகும். இவரது "சோழ நிலா" என்னும் வரலாற்று நாவல் ஆனந்த விகடன் இதழ் நிகழ்த்திய பொன்விழா இலக்கியப் போட்டியில் முதல் பரிசு பெற்றது ஆகும்.

**நான் வெட்ட வெட்டத் தழைப்பேன்**
**இறப்பினில் கண் விழிப்பேன்**
**மரங்களில் நான் ஏழை**
**எனக்கு வைத்த பெயர் வாழை (மேத்தா கவிதைகள், ப. 299)**

எனத் தனது கவிதைகளில் உள்ளடக்கம், வடிவம் உணர்த்தும் முறையில் புதுமை, கற்பனை, நளினநடை, நலமான சொல்லாட்சி, ஆழமான மன உணர்வுகள் போன்ற பண்புகள் இவரது கவிதைகளின் தனித்துவமாகும். "வானம்பாடி" என்ற புதுக்கவிதை ஏட்டின் வாயிலாக அறிமுகம் ஆன கவிஞர்களுள் மு.மேத்தாவும் ஒருவர்.. தமிழகக் கவிஞர் பேரவையின் தலைவராகப் பணியாற்றியவர். இவர் திரைப்படத் துறையிலும் பாடல்கள் எழுதி வருகிறார். தமிழர் ஐக்கிய முன்னேற்றக் கழகத் தலைவர். நூற்றுக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் 300க்கும் அதிகமான பாடல்களை எழுதியுள்ளார்.

**கல்வி**

கல்வி ஒரு மனிதனை முழுமையானவனாக மாற்றுவது. கல்வி எல்லோருக்கும் பொதுவான ஒன்று. கல்வி கற்பவன் மன்னனாகவும் இருக்கலாம் அல்லது எளிய குடியில் பிறந்தவனாகவும் இருக்கலாம். கல்வி இல்லாதவரை மக்கள் என்று கூற மாட்டர். கல்வி என்பதற்கு,

**அறிவு, படிப்பு, நூல், வித்தை, ஞானம் என்னும் பொருள்களைத் தருகிறது. கல்வியானது சில நாள் பயிர் என்று எண்ணிவிடுதல் கூடாது. அது பல்லாண்டுப் பயிராகும். நல்ல கல்வி முயற்சிகள் பலனளிப்பது பல்லாண்டுகளுக்கு பிறகே தெரியும். (தலைவருள் மாணிக்கம், ப. 21).**

ஆகவே மனித செயல்பாட்டிற்கு கல்வி முக்கியமான ஒன்றாகும். ஒரு மாணவனின் முன்னேற்றத்தில் வகுப்பறை கரும்பலகை சிறப்பிடம் பெறுகிறது. இதனை,

**கரும்பலகையில்**

**எழுதி நான்**

**கல்வி கொடுக்கிறேன்**

**என்று**

**கனிவாய்ச் சொன்னது**

**வெள்ளை சாக்பீஸ் (ஒற்றை தீக்குச்சி, ப. 30)**

என கல்வியின் சிறப்பை மேத்தாவின் கவிதை வழி அறிய முடிகிறது. இத்தகையச் சிறப்பு வாய்ந்த கல்வியானது இன்றைய சூழலில் அவலம் நிறைந்த ஒன்றாக மாறிவருகின்றது. இதற்கு கல்வி வியாபாரமான நிலை, பாடச்சுமை, ஆசிரியர்களின் நிலை காரணமாகின்றன.

**கல்வி வியாபாரமான நிலை**

தற்கால கல்வி முறை வியாபரமாகி விட்டது. வசதி படைத்தவர்களுக்கும், சமூகத்தில் உயர் நிலையில் இருப்பவர்களுக்கு மட்டுமே கல்வி என்றாகி விட்டது. இதற்கு முக்கிய காரணம் மக்களிடையே காணப்பட்ட ஆங்கில மோகம். இதை உணர்ந்த செல்வந்தர்கள் ஆங்கில வழிபாடசாலைகளை திறந்து கல்வியை வியாபாரமாக்கி வருகின்றனர். கல்வி கற்று வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளலாம் என்று கனவுலகில் வாழ்ந்தவர்கள் கல்வி கற்க முடியாத நிலையை எண்ணி கல்விக் கடவுளான சரஸ்வதி கூட வேதனைப்படுகிறாள் என்கிறார் மேத்தா.

**லட்சுமி தன்னை**

**லட்சியம் செய்யாததால்**

**இங்கே**

**சரஸ்வதி மிகவும்**

**சங்கடப்படுகிறாள் (ஒற்றை தீக்குச்சி, ப. 22)**

என்னும் வரிகள் இதனை மெய்ப்பிக்கின்றன. குழந்தைகளின் எதிர்காலம் ஒளிமயமானதாக சீரும், சிறப்புமாக எந்தவிதமான குறையும் இல்லாமல் இருக்க வேண்டும் என எண்ணி பெற்றோர்ப் பள்ளிக்குப் பிள்ளைகளை அனுப்பிப் படிக்க வைக்கின்றனர். ஆனால் அவர்களது கல்வியானது சில அரசியல்வாதிகளால் வியாபாரமாக்கப்படுகிறது என்பதை,

**கலைமகளின் வீணையை**

**ஏலம் போடுகிறார்கள்**

**அன்பான**

**அரசியல் வாதிகள் (ஒற்றை தீக்குச்சி, ப. 22)**

என்று மேத்தா நடைமுறைவாழ்க்கையில் கல்வி அரசியல்வாதிகளால் வியாபாரமாகிவிட்டத் தன்மையினைச் சுட்டிக்காட்டுகிறார். முந்தைய காலங்களில் கல்வி கற்க வேண்டுமெனில்

குருவுக்கு தட்சணைக் கொடுக்க வேண்டும். ஆனால் இன்றைய சமுதாயத்தில் கல்வியே வருமானத்தை பெருகச் செய்யும் வியாபாரமாகிவிட்டது என்பதை,

**…சரஸ்வதியையே**

**லட்சுமியாக்கிக்**

**கொண்டிருக்கிறார்கள் (கனவுகளின் கையெழுத்து, ப. 20)**

அரசும், கல்வி நிறுவனங்களும் ஒவ்வொரு பட்டப் படிப்பிற்கும் ஒவ்வொருத் தொகை எனத் தீர்மானிக்கின்றன. ஒரு மனிதனை ஒழுக்கமுடையவனாக, நல்லறிவுடையவனாக, பண்புடையவனாக, பகுத்தறிவுடையவனாக மாற்ற வல்ல கல்வி இன்றைய சமுதாயத்தில் வியாரமாகிவிட்டது என்பதை கவிஞர்கள் தம் கவிதை வாயிலாக விளக்கியுள்ளனர்.

**இன்றைய கல்விமுறை**

இன்றைய கல்வி முறையானது மாணவர்கள் இனிமையாக கற்பதற்கு ஏற்ப அமையாது, அளவுக்கதிகமான பாடச்சுமை கொண்டதாக மாறி வருகிறது. கல்வி இதயத்தில் சுமக்கும் இனிமையாக இல்லாமல் முதுகில் சுமக்கும் மூட்டையாகி விட்டது. புத்தக மூட்டையை சுமந்து மாணவர்கள் கூனிகளாகி விட்டனர். குழந்தைகள் கல்வியை வெறுக்கும் அளவிற்கு கல்விச் செயல்பாடுகள் மாறிவிட்டன. இதனை,

**கல்வி இங்கே**

**இதயத்தில் சுமக்கும்**

**இனிமையாய் இல்லாமல்**

**முதுகில் சுமக்கும்**

**மூட்டையாகி விட்டது…**

**கொடுமை என்னவென்றால்**

**குழந்தைகளெல்லாம்**

**கூனிகளாயின! (ஒரு வானம் இரு சிறகு, ப. 21)**

என மேத்தா குறிப்பிட்டுள்ளார். இந்தியாவில் மேலைநாட்டு கல்வி முறை அறிமுகமானதால் அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது. தனியார் பள்ளிகளின் வரவும் அவர்களது பாடத்திட்டங்ளும் அரசு பள்ளிகளில் மாணவர்கள் சேராத நிலைக்கு ஆளாக்கியுள்ளது. ஆங்கில கல்வி மோகத்தால் அரசு பள்ளிகள் நினைக்கப்படாமல் போய்விட்டது. இதனை மேத்தா குறிப்பிடும் போது,

**பள்ளிக்கூடங்கள் எல்லாம்**

**படிக்க பயன்பட்டது போய்**

**ஏழைகள் இப்போது**

**படுக்கப் பயன்படுகின்றன (என்னுடைய போதி மரங்கள், ப. 13)**

இன்றைய கல்வியானது குழந்தைகளின் மூளைக்கு எட்டாத ஒன்றாகவே மாறிவிட்டது. குழந்தைகளின் மூளையில் விதையை போல தூவப் பட வேண்டிய கல்வியானது ஆணியைப்

போல் அறையப்படுகிறது. அதனால் சமுதாயத்தின் ஊன்றுகோலாக திகழ வேண்டிய குழந்தைகள் பாடச் சுமையால் பரிதாப நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இதனை

**கல்வி இங்கே**
**நமத்துப் போன**
**தீக்குச்சியைப் போல்**
**சும்மா**
**உரசிப் பார்த்து விட்டு**
**உதிர்ந்து போகிறது (ஒரு வானம் இரு சிறகு, ப. 23)**

என இன்றைய கல்வி நிலையை மேத்தா விளக்கியுள்ளார்.

**இளைஞர் கல்வி**

ஒரு குடும்பத்தில் ஒருவர் படித்தால் அந்தக் குடும்பம் முன்னேற்றம் அடையும். எனவேதான் அன்ன சத்திரம் ஆயிரம் வைப்பதைவிட ஓர் குழந்தைக்கு எழுத்து அறிவிப்பது சிறந்தது என்றார் பாரதி. கல்வியின் முக்கியத்துவத்தை உயர்ந்த ஔவையும் கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே என்றார். இத்தகையக் கல்வி இன்றையச் சூழலில் வேலை வாய்ப்பற்ற நிலையை உருவாக்கி வருகிறது. இக்காரணத்தால் கல்விச் செலவு வீண் செலவாகத்தான் கருதப்படுகின்றது. இதனை உணாந்த மேத்தா,

**காகிதத்தில் செய்த**
**பட்டமாவது**
**பறக்கிறது**
**படித்து வாங்கிய பட்டமோ**
**அவர்களை**
**இறக்குகிறது (ஒரு வானம் இரு சிறகு, ப. 24)**

எனக் குறிப்பிட்டுள்ளார்.

**கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள்**

ஆசிரியர் என்பது ஆசு + இரியர் என பிரித்து பொருள் கொள்ளப்படுகிறது. ஆசு என்பது குற்றம். இரியர் என்பது அகற்றுபவர். ஆசிரியர் என்பதற்கு குற்றங்களை அகற்றுபவர் என்று பொருள். ஆனால் இன்றைய கல்வி முறையில் மாணவர்களை தண்டிக்கவும், கண்டிக்கவும் உரிமையில்லை. ஆசிரியரின் கையில் இருக்கும் கோலானது மாணவர்கள் தவறு செய்யும் அவர்களை கண்டிக்க முடியாமல் தங்களை தாங்களே அடித்துக் கொள்ள பயன்படுகிறது என மேத்தா இன்றைய கல்வி முறையில் ஆசிரியர்களின் நிலையை வருணித்துள்ளார்.

**ஒரு காலத்தில் / ஆசிரியர்களின் கையில்**
**செங்கோல் இருந்தது / அப்புறம்**
**அது- வெறும் / பிரம்பானது**
**அந்தப் பிரம்பும் / இப்போது பயன்படுவது**

**மாணவர்களை / அடிக்க அல்ல.......**

**ஆசிரியர்கள் / தம்மைத் தாமே**

**அடித்துக் கொள்ளத்தான் (ஒரு வானம் இரு சிறகு, ப. 23)**

ஒரு மாணவன் நல்லவனாக, பண்புடையவனாக வளர வேண்டுமெனில் கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவனிடம் காணப்படும் குறைகளை அகற்றி அவனை நல்வழிப்படுத்த வேண்டும். ஆனால் இன்றைய காலகட்டத்தில் மாணவனை கண்டித்தால் ஆசிரியர்கள் தண்டனை பெறும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

**முடிவுரை**

மேத்தா கவிதைகளில் இவ்வாறாக கல்வியின் நிலை சித்தரிக்கப்பட்டுள்ளது. கல்வியின் இன்றைய நிலையைக் குறிப்பிடுமிடத்து கல்வி ஒரு சுமையாக காட்சியளிக்கிறது. கல்வி என்பது வசதி படைத்தவர்களுக்கு மட்டுமே உரிமையுடைய ஒன்றாக மாறிவிட்டது. ஆசிரியர்ளால் தவறு செய்த மாணவனனையும் தண்டிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். படித்த இளைஞர்கள் பலர் முடித்தும் வேலையில்லாத காரணத்தினால் கல்வி முறைகளை வெறுக்கின்றனர் என கல்வி குறித்து கவிதைகள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

**குறிப்புகள்**

[1] சுந்தர வடிவேலு. *சிங்காரவேலரும் பகுத்தறிவும்,* ரசனா புக் ஹவுஸ், சென்னை – 2

[2] மு.மேத்தா. *மேத்தா கவிதைகள்.* கவிதா பப்ளிகேசன், சென்னை – 17 , இரண்டாம் பதிப்பு, 2011.

[3] மு.மேத்தா. *ஒரு வானம் இரு சிறகு.* வர்மா பதிப்பகம், சென்னை – 17, பதினொன்றாம் பதிப்பு, 2016.

[4] மு.மேத்தா. *என்னுடைய போதி மரங்கள்.* திருமகள் நிலையம், சென்னை – 17, எட்டாம் பதிப்பு 2014.

[5] மு.மேத்தா. *கனவுகளின் கையெழுத்து,* கவிதா பப்ளிகேசன், சென்னை – 17.

[6] மு.மேத்தா. *ஒற்றை தீக்குச்சி,* கவிதா பப்ளிகேசன், சென்னை – 17, இரண்டாம் பதிப்பு, 2001

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ *கீழ்* பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.